# விருட்சம்

VIRUTCHAM



COMMERCE STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

வணிக மாணவர் மன்றம்
வணிக முகாமைத்துவ பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

# விருட்சம்

## புதிய தொகுதி

**இதழ் - 06**

# 2001

**(கல்வியாண்டு 1999/2000)**

658.05
VIR AR.
UNIVERSITY OF JAFFNA LIBRARY
21 AUG 2001
PERIODICALS DIVISION

**இணை இதழாசிரியர்கள்**
செல்வன். T. ஜெயராஜா
செல்வி. A.D. நிஷாந்தி

ARCHIVES

**வணிக மாணவ மன்றம்**
யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

N. A

# VIRUTCHAM


**New Volume** : *2001*

**Published on** : *2001 July*

**Joint Editors** : *Mr. T. Jeyaraajah*
*Miss. A. D. Nishanthi*

**Printers** : *St. Joseph's Catholic Press*
*Jaffna. 021- 2378*



**Address** : *Commerce Students' Union*
*University of Jaffna*
*Thirunelvely*
*Sri Lanka*

# இலங்கை அரசு குடியான் விவசாயத்தை வளர்த்தெடுப்பதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றிய மீள்பார்வை

புராதன காலம் தொடக்கம் இலங்கை ஒரு விவசாய நாடு ஆகும். பண்டைய மன்னர் காலம் முதல் விவசாயத்திற்காக பாரிய குளங்களைக் கட்டுதல், அணைகளை அமைத்தல் இவற்றைப் புனரமைத்தல் மூலம் நீர்ப்பாசன முறைகளைத் திட்டமிட்டு, தீர்மானித்து, நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து காணப்பட்டதுடன் கிழக்காசியாவின் தானியக் களஞ்சியமாகவும் இலங்கை காணப்பட்டது. ஆனால் கி.பி. 1505 தொடக்கம் 1948 வரையான அன்னியராட்சிக் காலத்தில் இந்த நெல் உற்பத்தியை மேற்கொண்டுவந்த கிராமிய குடியான் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, கவனிக்கப்படாத ஒரு துறையாக விளங்கியது. இக் காலத்தில் தான் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1830களில் இருந்து பெருந்தோட்ட விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டு அத்துறை நன்கு வளர்த்தெடுக்கப்பட்டு வந்தது. இதன் விளைவாக இலங்கை சுதந்திரம் அடைந்தபோது இலங்கை தனது அரிசித் தேவையில் 50%க்கு மேல் இறக்குமதியில் தங்கியிருந்ததுடன் குடியான் விவசாயத்துறை நலிவடைந்த நிலையில் சுமார் ¾ பங்கு மக்களையும் கொண்ட துறையாகவும் பல்வேறு பிரச்சனைகளை அனுபவித்து வருகின்ற துறையாகவும் காணப்பட்டது. இந்நிலையில் ஆட்சிக்கு தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் 2ம் உலக யுத்த காலத்தில் ஏற்பட்ட உணவு நெருக்கடியின் அனுபவத்தில் உணவுப் பாதுகாப்பை உருவாக்க வேண்டிய தேவை,

*Mr. S. S. Uthayakumar*
*Lecturer*
*Dept of Economics*

வறிய மக்களைக் கொண்ட குடியான் விவசாயத் துறையினரின் வறுமையைத் தணிக்க வேண்டிய சமூகக் கடப்பாடு, அத்துடன் அரசியல் ரீதியில் பெருமளவு மக்களைக் கொண்ட இத் துறையினரின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வரவேண்டிய தேவை எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு குடியான் விவசாயத்துறையை உள்நாட்டு விவசாயம் என்ற உருமாற்றத்துடன் சுதேச ஆட்சியாளர்களின் கவனத்திற்குட்பட்டு வளரத் தொடங்கியது. இந்நிலையில் ஆட்சியாளர்கள் பெருந்தோட்டத் துறையை அபிவிருத்தி செய்து அதன் மூலமாக ஏற்றுமதிகளை அதிகரித்து அன்னியச் செலாவணியை பெற்று அரசின் வருமானத்தை உயர்த்துவதனையும் உப உணவுப் பயிர்ச் செய்கையை குறிப்பாக நெற்செய்கையை அதிகரித்து சிறிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணுதலையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர்.

இவ் வகையில் குடியான் விவசாயத் துறை எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை முதலில் நோக்கின் சுமார் 72% மக்கள் குடியான் விவசாயிகளாக உள்ளதுடன் அவர்களில் பெரும் பங்கினர் நிலமற்றவர்களாகவும் சிறிய நில உடமையும், குத்தகை நிலங்களைக் கொண்டவர்களாகவும் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்த வறியவர்களாகவும் காணப்பட்டதால் வறுமை என்பது இவர்களிடம் பொதுவாகக் காணப்பட்டது. அத்துடன் இவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளின்போது போதிய நீர் கிடைப்பதிலும் உரியகாலத்தில் நீர் கிடைப்பதிலும் பிரச்சனை உள்ளது. புதிய இனங்கள், உள்ளீடுகள், வளமாக்கிகள், கிருமிநாசினிகள், களைநாசினிகள் பற்றிய அறிவு குறைவாக உள்ளமை, உரிய நேரத்தில் இவற்றைப்

பெறமுடியாமை, தேவையான அளவு பெற முடியாமல் கஸ்டப்படுகின்றார்கள். மேலும் உற்பத்தி விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில் கூட உரிய பாதுகாப்பின்றி சுரண்டலுக்குட்படுகின்ற தன்மைகள் போன்ற பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவற்றை தொகுத்து சுருக்கமாகக் குறிப்பிட்டால்

1) நில உடமையில் உள்ள குறைபாடுகள்
2) நிதிப்பற்றாக்குறை
3) உள்ளீடுகள் பெறுவதில் உள்ள குறைபாடு
4) நீர்ப் பற்றாக்குறை
5) சந்தைப்படுத்தல் பிரச்சனை
6) உரிய பாதுகாப்பு இன்மை

போன்ற பல பிரச்சனைகளை குடியான் விவசாயிகள் அனுபவித்து வருகின்றனர். இவர்களின் இப் பிரச்சினைகளைத் தீர்த்து இத் துறையை வளர்த்தெடுக்க அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளை நோக்குவோம்.

### (1) நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்

இவ் வகையில் விவசாய உற்பத்தியில் முக்கிய காரணியாக நிலம் என்பது அமைகின்றது. எனவே இலங்கையில் நெல் விவசாய நிலங்கள் சிறிய சிறிய துண்டுகளாகவும் சிதறிய நிலங்களாகவும் காணப்படுகின்றது. அத்துடன் நில உடமை அற்ற அனேக விவசாயிகள் குத்தகை நிலத்தில் விவசாயம் செய்வதும், விவசாயக் கூலிகளாகப் பணி புரிவதும் பொதுவாகக் காணப்படுவதால் உற்பத்தி, வருமானம் என்பன குறைவாகவே காணப்பட்டது. இதனால் சேமிப்புக் குறைவாகவும் அதனால் கடன் பெற வேண்டிய சூழ்நிலையும் உற்பத்தி முறைகளைக் கையாள்வதில் அனுபவம் இன்மையும் போதிய அறிவு இன்மையும் ஆர்வம் இன்மையும் காணப்படுவதால் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் அரசு பிரச்சனைகளைத் தீர்க்க முற்பட்டது. குறிப்பாக 1840ம் ஆண்டு முடிநில அபகரிப்புச் சட்டம் மூலம் நிலங்கள் முழுவதும் முடிக்குரியதாக்கப்பட்டது. இது நிலமற்ற விவசாயிகளை அதிகரிக்கச் செய்தது. இதைவிட நிலம் வைத்திருப்பவர்களில் 80% நெற்காணிகள் 2 ஏக்கரை விட குறைவான நிலப் பரப்பைக் கொண்டே காணப்பட்டது.

இச் சூழ்நிலையில் சுதந்திரத்தோடு ஆட்சிக்கு வந்த சுதேச ஆட்சியாளர்கள் நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முற்பட்டனர். நிலச் சீர்திருத்தம் ஊடாக இதனை அடைய வாய்ப்பு ஏற்பட்டது. இவ் வகையில் நில ஆட்சிமுறை, குத்தகை முறை, தலைவரி முறை போன்றவற்றை ஒழுங்குபடுத்துகின்ற வகையில்,

1) குத்தகை முறைகளைச் சீர்திருத்தல்.
2) நிலத்திற்கு உச்சவரம்பு விதித்தல் அதாவது சொத்துடமையில் சமத்துவத்தைப் பேணி சமூக நீதியை ஏற்படுத்தல்
3) உற்பத்தித் திறனை அதிகரித்தல்
4) தொழில்வாய்ப்பை அதிகரித்தல்
5) அரசிற்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஒரு உறவுப் பாலத்தை உருவாக்குதல்
6) மரபுரீதியான நில உடமையை ஒழித்தல்
7) கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை அமைத்தல்

போன்ற நோக்கங்களை அடையும் பொருட்டு நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. குறிப்பாக 1930ல் வரண்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டம், எதிர்பார்த்த பொருளாதார விளைவுகளைக் கொடுக்கவில்லை. இதன் அனுபவத்தில் விவசாய அபிவிருத்தியை மேற்கொள்ளும்பொருட்டு 1958இல் நெற்காணிச் சட்டம் உருவாக்கப்பட்டது. இது குடியான் விவசாயிகளை சுரண்டுகின்ற குத்தகை முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. 1958இல் 400,000 ஏக்கர் நெற்காணியில் 300,000 குடியான் விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இச் சட்டத்தின் ஊடாக

1) நிலங்கள் துண்டாடப்படுவது தடுத்தல்
2) குடியான் விவசாயிக்கு அவன் பயிர் செய்யும் நிலத்தில் நிரந்தர பாதுகாப்பு அளித்தல்
3) நிலச் சுவானுக்கு கொடுக்கவேண்டிய வாடகையை வரையறுத்தல்

4) விவசாய உற்பத்திக் கருவிகளுக்கான வாடகை, கடன்களுக்கான வட்டி, கூலி போன்றவற்றை அமுல்படுத்தல்

போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய வகையில் கிராமிய விவசாயிகள் நன்மை அடையும் நோக்கில் முன் வைக்கப்பட்ட இச் சட்டம் கிராமப்புறங்களில் ஓரளவு வெற்றி கண்டாலும் நிலச் சுவான்களிடம் காணப்பட்ட அதிகாரமும் விவசாயிகளின் வறுமையும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்க வில்லை. எனவே 1972இல் நிலச் சீர். திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இது

1) நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல்
2) சிறிய நில உடமையாளருக்கு நில உடமையை அதிகரித்தல்
3) உற்பத்தியை பெருக்குதல்
4) தொழில்வாய்ப்பை அதிகரித்தல்
5) சொத்துப் பங்கீட்டில் உள்ள சமமின் மையை குறைத்தல்

போன்ற நோக்கங்களைக் கொண்டி ருந்தது. அதாவது குறிப்பாக இச்சட்ட மூலம் கூடிய நிலம் உள்ளவர்களிடம் நிலத்தை பறிமுதல் செய்து நிலமற்ற மற்றும் சிறிய நில உடமையார்களுக்கு பறிமுதல் செய்த நிலத்தை வழங்கும் வகையில் அமைந்தது. குறிப்பாக 25 ஏக்கர் நெற் காணிக்கும் 50 ஏக்கர் மேட்டுக் காணிக்கும் உச்ச வரம்பாக வரையறுக்கப்பட்டது. இருப்பினும் இச்சட்டம் கிராமிய விவசாயிகளின் பிரச்சனைக்கு உகந்த தீர்வு முறையாக அமையாமையால் 1975ல் 19ம் இலக்க திருத்தப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனூடாக பொதுக் கம்பனிகள் பெயரில் இருந்த நிலங்கள் மீதும் உச்சவரம்பு நிர்ண யிக்கப்பட்டது. ஆனால் மதச் சார்பான நிறுவனங்கள் மீது உச்சவரம்பு விதிக்கப்பட வில்லை. மேலும் இச் சட்டம் கம்பனி களுக்கு சொந்தமாக உள்ள காணிகளை நில ஆணைக்குழுவின் உடமையாக்க வழி செய்யப்பட்டது. குடியான் விவசாயிகள் வருடா வருடம் செலுத்தும் குத்தகைப் பணமே காணிகளை அவர்களது உடமை யாக்கும் பணமாக இருந்தது. அதாவது சுவீகரிக்கும் ஆண்டுகளுக்கு முன்னைய 5 வருடங்களில் அந் நிலத்தில் இருந்து பெறப்பட்ட சராசரி இலாபத்தில் நெல் நிலமாயின் 10 மடங்கும் மற்ற நிலமாயின் 15 மடங்கும் நட்ட ஈடாக கொள்ளப்பட்டது. எனினும் இவ்விரு நிலச்சீர்திருத்தங்களும் கிராமிய விவசாயப் பொருளாதாரத்தில் எதிர் பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. இச்சட்டங்கள் மூலம் காணிகள் அரச உடமையாக்கப்பட்டபோதும் மத நிறுவனங் களுக்கு சொந்தமான பயிரிடக்கூடிய பெரு மளவு நிலப்பரப்பு பயிரிடப்படாமல் இருந் தது குறிப்பிடத்தக்கது.

## (2) நீர்ப்பாசனத் திட்டங்களும் குடியேற்றத் திட்டங்களும்

அரசினால் மேற்கொள்ளப்பட்ட குடி யேற்றத் திட்டங்களாக கிராமிய விஸ்தரிப்புத் திட்டங்கள், பலநோக்குத் திட்டங்கள், பாரிய குடியேற்றத் திட்டங்கள், இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், உலர் வலயக் குடியேற்றத் திட்டங்கள், ஒன்றிணைந்த கிராமிய அபி விருத்தித் திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பல திட்டங்கள் ஊடாக நீர்ப்பாசன வசதியையும், பயிர் செய்யக் கூடிய நிலத்தின் அளவையும் அதிகரிப் பதன் ஊடாக உற்பத்தி அளவை அதி கரிக்க நடவடிக்கைகள் எடுத்தது.

இவ்வகையில் 1947ல் ஆரம்பிக்கப் பட்ட கல்லோயா குடியேற்றத்திட்டம் மூலம் ஒவ்வொரு குடியானவனுக்கும் தலா 5 ஏக் கர் தாழ்நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. பின்னர் இது முறையே 3 ஏக்கர் தாழ்நிலமும் 2 ஏக்கர் மேட்டு நில முமாகக் குறைக்கப்பட்டது. இது நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கையைக் குறைத் தாலும் எதிர்பார்த்த பொருளாதார வெற்றி யினை எட்டவில்லை. மேலும் மன்னர் களால் கட்டப்பட்ட பல குளங்கள் அன் னியர் ஆட்சிக் காலத்தில் கவனிக்கப்படா திருந்தமையால் சுதந்திரத்தின் பின் சுதேச ஆட்சியாளர்கள் அவற்றை புனரமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்த முயற்சி எடுத்தனர். இவ் வகையில் காலவெவ, திசவெவ, கந்தளாய்க் குளம், மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம் போன்ற பலவற்றை புனருத்தாரணம் செய்தார்கள் இவ்வகையில் நீரை தாராளமாகப் பெறும் நோக்குடன் ஏற் கனவே இருந்த நீர்ப்பாசன முறைகளை மீள அமைத்தல், புனரமைத்தல் மூலமும் புதிய திட்டங்களை உருவாக்குவதன் மூலமும்

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இவ் வகையில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்ட திட்டமாக வனவள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் காணப்படுகின்றது. இது வரண்ட வலயத்தில் 55% ஆன நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதலும், நிலமற்றோருக்கு நிலம் வழங்கி குடியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் நீர்மின் சக்தியைப் பெறுதல் என்ற வகையிலும் பலநோக்கு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. 1976ல் இத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டாலும் 1977ன் பின் வந்த அரசு அதனை துரித மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக மாற்றி விரைவாக நடைமுறைப்படுத்தி, கூடிய நன்மை பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வகையில் 144,600 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் வழங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் சிறுபோகம், பெரும் போகத்திற்கு என 120, 000 ஹெக்டேயர்கள் நெல் பயிரிடப்பட்டதுடன் 114,800 குடும்பங்களுக்கு 508,300 ஹெக்டேயர் நிலப்பரப்பில் குடியமர்த்தப்பட்டனர். இவற்றைவிட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அரசு முடிக்குரிய காணிகளையும், தனியாரிடம் இருந்து உச்சவரம்புக்கமைய சுவீகரிக்கப்பட்ட காணிகளையும் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கி அப்பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளும், வேறு வசதிகளும் உருவாக்கிக் கொடுத்து, குடியேற்றப்பட்டவர்கள் இவ்வகையில் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில்,

1) நிலமற்றோருக்கு நிலம் வழங்கும் திட்டம்
2) வறள்வலயக் குடியேற்றத் திட்டங்கள்
3) நில விரிவாக்கல் திட்டம்
4) எல்லை நிலவழங்கல் திட்டம்
5) இணைந்த குடியேற்றத் திட்டம்
6) மேட்டுநிலக் குடியேற்றத் திட்டம்
7) ஏனைய திட்டங்கள்

எனப் பலவற்றை நாம் காணமுடியும். இவை அனைத்தும் நெல் உற்பத்தியையே மையமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டன. இவ் வகையில் பல்வேறு வகையான நீர்ப்பாசனத் திட்டங்கள், குடியேற்றத் திட்டங்கள் ஊடாக ஏற்கனவே பயிர் செய்யப்படும் நிலங்களுடன் மேலும் பயிரின் பரப்பளவை அதிகரித்து அவற்றுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் நெல் உற்பத்தியில் தன்நிறைவை அடைய முயற்சிக்கப்படுகின்றது. இதன் விளைவாக நெல் உற்பத்தி அளவு பல மடங்கு அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## உற்பத்தித் திறனை மேம்படுத்தல்

சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து நெல்லின் உற்பத்தித் திறனை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை மேற் கொண்டது. குறுங்காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் இனங்களை அறிமுகம் செய்தல், உரம், கிருமிநாசினி, களைகொல்லிகள் போன்றவற்றை அறிமுகம் செய்தல் ஊடாக ஹெக்டேயருக்கான சராசரி விளைச்சலை அதிகரிக்கச் செய்தது. இவ்வகையில் ஹெக்டேயர் ஒன்றுக்கு சராசரி விளைச்சல் 1950இல் 1500 கிலோவும் 86/87ல் அதி கூடிய பதிவான 3678 கிலோவும் 1999ல் 3672 கிலோவும் 2000இல் 3856 கிலோவுமாக உயர்ந்து சென்றது.

1952ல் பத்புலகொட என்ற இடத்தில் பல புதிய வீரிய இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டது. எச்—4, எச்—8, பிஜி—34, பிஜி—94 போன்ற 20ற்கு மேற்பட்ட இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பாரம்பரிய இனங்கள் பயிரிடும் பரப்பளவு தொடர்ச்சியாகக் குறைவடைந்து வர புதிய இனங்களின் பயிரிடும் பரப்பளவு கூடிவந்தது. இதனை விட பொம்புவெல, வபதுவ, அம்பாந்தோட்டை, நிக்கரவட்டிய, மகா இறுப்பல போன்ற ஆராய்ச்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நெல்லினங்கள் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்றுக் காணப்பட்டது. அதே போல் பிலிப்பைன்ஸில் அறிமுகமான ஐ. ஆர்—8 இனமும் முக்கியம் பெற்றது. இருப்பினும் பாரம்பரிய இனங்களை தொடர்ந்தும் கணிசமான விவசாயிகள் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

செயற்கை உரங்கள் அறிமுகத்துக்கு முன் இயற்கை உரங்களே அதிகம் பயன்படுத்தப்பட்டது. உர அறிமுகத்துடன் 1951ல் உரமானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதன் அளவு 1977களின் பின் 50% குறைக்கப்பட்டு 1989ல் முற்றாக நிறுத்தப்

பட்டு 1994 முதல் மீண்டும் வழங்கப் படுகின்றது. புதிய நவீன நெல்லினங்கள் செயற்கை உரங்களை அதிகம் உள்வாங் கும் தன்மை கொண்டு காணப்படுகின்றது. இதற்கமைய 1960களில் 20,000 மெற்றிக் தொன்னாக இருந்த உரப் பயன்பாடு 1994ல் 270,000 மெற்றிக் தொன்னாக உயர்ந்ததுடன் 2000 இல் 257,700 மெற் றிக் தொன்னாகவும் சற்றுக் குறைந்து காணப்படுகின்றது. இதுவும் நெல் உற் பத்திக்கு சராசரி விளைச்சல் அதிகரிக்க வழிகோலியது. உதாரணமாக 1950ல் 649,000 மெற்றிக் தொன்னாக இருந்த நெல் உற்பத்தி 1990ல் 2,412,000 மெற் றிக் தொன்னாகவும், 1999இல் 2,868, 000 மெற்றிக் தொன்னாகவும், 2000இல் 2,860,000 மெற்றிக் தொன்னாகவும் காணப்பட்டது.

## விவசாயிகளுக்கு கடன் வழங்குதல்

கிராமிய விவசாயிகள் வறியவர்களாக உள்ளதுடன் உற்பத்தித் தேவைக்கு மட்டு மன்றி நுகர்வுத் தேவைக்கும் கடன் பெற வேண்டிய தேவை காணப்பட்டது. இக் கடன்களை முறைசார்ந்த துறைகளான காணி ஆணையாளரின் திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக கொடு கடன் திட்டத்தை மேற்கொண்டது. மற்றும் உணவு உற்பத்தித் திணைக்களம், விவசாய சேவைகள் நிலையம் என்பனவும் கடன் களை வழங்கியது. ஆனால் இவற்றில் கடன் பெறுவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருந்தது. அதேநேரம் உறவினர்கள், நண் பர்கள், நிலச் சுவாந்தர்கள், உள்ளூர் வர்த் தகர்கள், பகுதிநேரமாகவும் முழு நேரமாக வும், வட்டிக்குப் பணம் கொடுப்போர் போன்ற முறைசாராத துறைகளில் இருந்து கடன் பெறவேண்டிய சூழ்நிலையே காணப்பட்டது. இதுவே சாத்தியமானதாகவும் இருந்தது. அதாவது தேவையான உடன், தேவை யான தொகையை பெற முடிந்ததும், எத் தேவைக்கும் கடன் பெறக்கூடிய சூழ்நிலை, நிலத்தை அடைமானம் வைத்தோ, விளை பொருட்களை குறிப்பிட்ட விலையில் தருதல் என்ற முற்கூட்டியேயான ஒப்பந்த மூலமோ கடனை இலகுவில் பெற முடிந்தது. இத னால் விவசாயிகள் அதிக வட்டி செலுத் தல், உற்பத்தி பாதிக்கப்படுகின்ற காலத்தில் கடனை அடைக்க முடியாமல் நில உடமை யினை இழத்தல், கடனை அடைப்பதற்காக கடனைப் பெறுதல் போன்ற பல வழிகளில் கஸ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் அரசு 1960களில் இருந்து மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கிராமிய வங்கிகளின் கிளைகளை பல பாகங்களி லும் விஸ்தரித்து விவசாயிகளுக்கு கடன் வழங்க ஊக்குவிப்பு கொடுத்தது. கடனை மீளச் செலுத்தாத போது வங்கிகள் தொடர்ந் தும் கடன் வழங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்து வதற்காக மத்திய வங்கியால் மீள் நிதியிடல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டது. இது 1994ல் மாற்றீடு செய்யப் பட்டு ஆண் டொன்றுக்கு 7.5% கொண்ட வட்டி உதவிக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதன் மூலம் வர்த்தக வங்கிகளும் கடன்களை வழங்க வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டது. இவ்வாறு மீள் நிதியிடல் வசதிகளுடன் 1973ல் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத் தையும் 1986 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத் தையும் அறிமுகம் செய்து வைத்தது.

இது இவ்வாறு இருக்க கடன் பெற் றவர்களும் பெற்ற கடனை மீளச் செலுத்து வதில் அக்கறை காட்டாமையால் கடன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலை யில் கடன் வழங்க வங்கிகள் மறுக்கின் றன. மேலும் உற்பத்திகள் பாதிக்கப்படுகின்ற காலங்களில் மீண்டும் கடன் பெற வேண் டிய நிலை உருவாகல், பெற்ற கடனை உற்பத்திக்கு மட்டுமன்றி நுகர்வு போன்ற பிறநடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தல், உரிய நேரத்தில் கடன்பெற முடியாமை, தேவைக் கேற்ற கடன் பெறமுடியாத நிலை, விவ சாயிகளுக்கென உருவாக்கப்பட்ட கடன் வச தித் திட்டங்கள் மூலமான நன்மை இலக்கு மாறி வர்த்தகர்கள், சொத்துடமையாளர்க ளின் கைமாறுதல், அவர்களிடமே விவசா யிகள் கடனைப் பெறுகின்ற நிலை ஏற்பட்டு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை பாதிக் கின்ற நிலை என்பனவற்றின் விளைவால் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற நிதி நெருக் கடி நிலையை சிறு அளவில்தான் முறை சார் துறை நிவர்த்தி செய்கின்றது என எதிர்பார்க்க முடிகின்றது. இவற்றினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் 1999இல் 318 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

# விவசாயிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள்

## (1) நெல்லுக்கான உத்தரவாத விலைத் திட்டம்

இது 1948ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது புசல் ஒன்றுக்கு 8 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்புக்களை கவனத்தில் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டு 1993ல் 155 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு தற்போதும் இவ்விலைமட்டமே பேணப்படுகின்றது. 1977 வரை அரிசியின் இறக்குமதி விலையினைவிட உத்தரவாத விலை உயர்வாக இருந்தது. திறந்த பொருளாதார நடவடிக்கையின்பின் இது மாறியது. ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கங்கள் நெல்லினை உத்தரவாத விலையின் கீழ்க் கொள்வனவு செய்கின்ற நெல்லை நீண்டகாலத்திற்குப் பேணி வைக்கமுடியாமையால் கொள்வனவு செய்வதைக் குறைத்துக் கொண்டது. இதனால் விவசாயிகள் திறந்த சந்தையை நாடிப் போகும் நிலை ஏற்பட்டது. ஆனால் திறந்த சந்தையில் விவசாயிகளுக்கும் வாங்குவோருக்கும் இடையில் தரகர்கள் காணப்பட்டதால் அவர்கள் விவசாயிகளைச் சுரண்டினர் இவற்றைக் கவனத்தில் கொண்டு நெல்லின் பருவகால உற்பத்தியைப் பொறுத்து விலையை உறுதிப்படுத்தி விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யலாம் என நெல் கொள்வனவு செய்யும் சபை (Paddy Marketing Board) 1972ல் ஆரம்பிக்கப்பட்டு அது செயற்படத் தொடங்கியது. அதுகூட எதிர்பார்த்தளவு வெற்றியைத் தரவில்லை.

## (2) காப்புறுதித் திட்டம்

1973ல் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் காப்புறுதிச் சபை பல ஆண்டுகளாக நெற்செய்கை தொடர்பாக காப்புறுதி வழங்கியது. நெல்லுக்கு மட்டுமன்றி உபஉணவுப் பயிர்களுக்கும் கால்நடை வளர்ப்பிற்கும் உதவும் வகையில் செயற்பட்டது. ஆனால் இதன் மூலம் பெற்ற பணம் உண்மையில் இழப்பீட்டுக்குப் போதுமானதாக அமையவில்லை. இச்சபை எதிர்நோக்கிய நிதிப் பற்றாக்குறையால் இதன் செயற்பாடு போதாமல் இருந்ததுடன் இது தனியுரிமைத் தன்மையுடனும் காணப்பட்டது. இதனால் பின்னர் காப்புறுதிச் சட்டத்தினை நீக்கி தனிப்பட்ட காப்புறுதியாளர்களும் பயிர்க்காப்புறுதியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி 1999ல் விவசாய காப்புறுதி சபை மீளமைக்கப்பட்டு விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை என பெயரிடப்பட்டது. இதனால் தனியார் காப்புறுதிகளின் வரவு வருவது குறிப்பிடத்தக்கது.

## (3) ஓய்வூதியத் திட்டம்

விவசாயிகள் உழைக்கும்போது சேமிப்பினை மேற்கொண்டு எதிர்காலத்தில் ஓய்வூதியம் பெறக் கூடியவகையில் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுவது விவசாயிகளின் முதுமைக் காலத்திற்கு பாதுகாப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள்

குடியான் விவசாயத்துறையில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய வகையில்

1. கமநல சேவை நிலையங்கள் விஸ்தரிக்கப்படல்.
2. விவசாயப் பயிற்சிக் கல்லூரிகள், விவசாய ஆராட்சி நிலையங்களை விஸ்தரித்தல்.
3. பாரம்பரிய நெல்லினங்களையும் புதிய புதிய இனங்களையும் ஆராய்ந்து அறிமுகம் செய்தல்.
4. விவசாய உற்பத்தி தொடர்பான கண்காட்சிகள், கருத்தரங்குகளை நடாத்தி மக்கள் மத்தியில் விவசாயம் பற்றிய அறிவைப் பெருக்குதல்.
5. விவசாய உற்பத்தி ஆலோசனைகள், உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளை வழங்குதல்.
6. உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு குறைந்த வட்டியுடன் கடன் அறிமுகம் மற்றும் வாடகைக்கு பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. களை கொல்லிகள், கிருமி நாசினிகள் பற்றிய பூரண விளக்கம் எல்லா மக்க

ளிடையேயும் சென்றடையுமாறு வசதி களை ஏற்படுத்தல்.

8. விவசாய விரிவாக்கல் திட்டம் மூலம் விவசாய தொழில்நுட்பக் கல்வியை புகுத்துதல்.

9. பல்கலைகழகங்களில் விவசாய பாட நெறியை கற்பித்தல் ஊடாக ஆராட்சி கள் மேற்கொள்ள வழிசெய்தல்.

10. கிராமம் தோறும் விவசாய உற்பத்திக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றின் மூலம் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச் சனைகளுக்கு ஆலோசனை வழங்கல் என்ற வகையில் பல்வேறு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக இலங்கை அரசு குடி யான் விவசாயிகளைப் பாதுகாத்தல், அவர் களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், உணவுத்தேவையில் தன்னிறைவு அடை தல் போன்ற பல நோக்கங்களைக்கொண்டு இத்துறையை வளர்த்தெடுப்பதற்காக பல நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு வரு கின்ற போதிலும் அவை பூரணமாக வெற்றி யளிப்பதாக அமையவில்லை. மாறாக பல பிரச்சனைகள் தொடர்ந்தும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக

1) உறுதியான விலை இன்மை
2) சந்தைப்படுத்தலில் பாதுகாப்பின்மை தர கர்களின் சுரண்டலுக்குட்படல்
3) பல தரப்பட்ட உள்ளீடுகளையும் பெறு வதில் உள்ள சிக்கல்
4) இரசாயன வளமாக்கிகள், நாசினிகள் பாவிப்பதால் சூழல் மாசடைதல்
5) வழங்கப்படுகின்ற மானியங்கள் உரிய வர்களுக்கு சேர்வதில் குறைபாடு
6) முறைசார் மூலங்களில் கடன் பெறு வதில் உள்ள இறுக்கத்தன்மையும் தொடர்ந்தும் முறைசாரா மூலங்களில் கடன் பெறலால் சுரண்டலுக்குட்படல்
7) இயற்கையான அழிவுகள் ஏற்படல் (வெள்ளம், வரட்சி)
8) களஞ்சியப்படுத்தலால் சிக்கல்களை எதிர்நோக்கல்
9) வேலைப்பழு கூடிய காலங்களில் கூலி யாட்களைப் பெறுவதில் சிக்கல்
10) சிறிய நிலங்களாகவும் சிதறிய நிலங் களாகவும் உள்ளதால் உற்பத்தி முறை யில் நவீன இயந்திரங்கள் பயனபடுத் தலால் குறைபாடு காணப்படல்

போன்ற பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ஆகவே சுருக்கமாகக் குறிப்பிட்டால் இலங்கையில் அதிகரித்துவரும் சனத் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரித்து உணவு நெருக்கடியை நிவர்த்தி செய்யவும் அதிகரித்து வரும் ஊழியப் படைக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்களை அதிகரித்து வேலை இன்மைப் பிரச்சனை யைக் குறைத்து கிராமிய மக்களின் வறுமை, வருமானச் சமமின்மை போன்றவற்றைத் தணித்து அவர்களின் உற்பத்தி ஆற்றலை உயர்த்தி, உற்பத்தியைக் கூட்டி, வருமானத் தைக் கூட்டி அதனூடாக வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் கிராமங்களை அபிவிருத்தி அடையச் செய் வதன் ஊடாக இலங்கையின் பொருளா தாரத்தை ஒட்டு மொத்தமாக அபிவிருத்தி அடையச்செய்யும் சமூக, பொருளாதார நோக்கிலும், 72%ற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட கிராமிய விவசாயிகளின் ஆதர வினைத் தமதாககி அரசியல் ரீதியில் ஆட்சிக்கு வரவும், தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் அரசியல் நோக்கிலும் குடியான் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கில் நிலச் சீர்திருத்தங்கள், குடியேற்றத் திட்டங்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள், மானியத் திட்டங்கள், கடன் வசதிகள், காப்புறுதி வசதிகள், சந்தைப்படுத்தல் வசதி, விலை உத்தரவாதம் என்ற பல வழிகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின் றன. இதன் விளைவாக உற்பத்தி அளவு, பயிரிடும் நிலத்தின் அளவு, தொழில் வாய்ப்பு, சராசரி விளைச்சல் என்பன தொடர்ந்து அதிகரித்து வந்து 1984களில் அரிசித் தேவையில் தன்னிறைவு நிலை யினை ஓரளவு அடைய முடிந்தது. ஆனால் 1983ல் இருந்து உள்நாட்டு யுத்தம் தீவிரம் அடையத் தொடங்கியதில் இருந்து இன்று வரை அதன் தீவிரம் கூடி வருவதால் அரிசித் தேவையில் 85% வரைதான் தற் போது பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது. இதற்கு யுத்த தீவிரத்தால் சில பிரதேசங் களில் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை கள், போக்குவரத்துத் தடைகள், எரிபொருட் களின் விலையேற்றம் போன்றவை முக்கிய காரணங்களாக அமைகின்றது.

ஆகவே இலங்கை அரசு குடியான் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை நன்கு அவதானித்து அதற்குரிய முறையில் நடவடிக்கைகள், கொள்கைகளை முன்வைத்து சகல பிரதேசங்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் விவசாயிகளுக்கு நன்மைகள் சென்றடையக் கூடிய வகையில் விசுவாசமான முறையில் செயற்படுத்துவதன் ஊடாகத்தான் உணவில் தன்னிறைவு என்ற இலக்கினையும் கிராமிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி கிராமங்கள் அபிவிருத்தியடைந்து இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வழி செய்யும். அவ்வாறில்லாமல் தற்போது மேற்கொள்வது போன்று மேலெழுந்த வாரியாக தொடர்ந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் உரிய இலக்கினை அடையவும் முடியாது, பிரச்சனைகள் தீர்க்கப்படவும் முடியாத நிலையில் மேலும் பல பல பிரச்சனைகள் தோன்றி குடியான் விவசாயம் பலவீனமடையவே வழிகோலும் எனின் மிகையாகாது.


உசாத்துணை நூல்கள் :

1) Nakamura.H, Ratnayake.P., Senanayake.S.M.P., Agricultural Development: Past Trends and Policies, Delemmas of Development fifty years of Economic change in Sri Lanka, 1997, P.P. 264 – 282

2) இலங்கையின் சுதந்திர பொன்விழா மலர், 1998. பக்கம். 116~120

3) பேரின்பநாதன்.ந, "கடன்களும் மீள் நிதியீட்ட வசதிகளும்" புரட்டாதி 1983 சிந்தனை, ப.14~36

4) பேரின்பநாதன்.ந, "நெல்லுக்கான உத்தரவாத விலைத்திட்டம்" புரட்டாதி 1984 சிந்தனை, ப.33~55

5) கமத்தொழில் விளக்கம், 1951, 1964, 1972

6) மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் 1977, 1994, 1999, 2000

7) மத்திய வங்கியின் பொருளாதார மீளாய்வு 1980, 1995

8) Agricultural Statistics of Sri Lanka 1994.

9) Margainstitute, "Green Revolution with or without tractors" in the case of Sri Lanka 1974, Vol-02, P.P. 60 – 64

10) பொருளியல் நோக்குகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் நோக்குகள் | ஐப்பசி ~ 1977 | பக்கம் 11~14 |
| | பங்குனி ~ 1980 | பக்கம் 16 |
| | சித்திரை ~ 1982 | பக்கம் 14~15 |
| | புரட்டாதி ~ 1982 | பக்கம் 01~16 |
| | ஆனி ~ 1985 | பக்கம் 14~17 |
| | சித்திரை ~ 1986 | பக்கம் 20~21 |
| | ஐப்பசி ~ 1986 | பக்கம் 12~18 |
| | பங்குனி ~ 1987 | பக்கம் 30 |
| | புரட்டாதி ~ 1988 | பக்கம் 5 |
| | ஆனி / ஆடி ~ 1992 | பக்கம் 25~32 |